★ கோதாவரி – காவிரி இணைப்பு திட்டம் ★ தமிழகத்துக்கு தரவேண்டிய பாக்கித் தொகையை உடனே வழங்குங்கள்
★ வேளாண் சட்டங்களை வாபஸ் பெறவேண்டும் ★ தேசிய கல்வி கொள்கையை கைவிடுங்கள்

தமிழகத்தில் உள்ள மத்திய அரசு அலுவலகங்களில் தமிழகத்தில் உள்ளவர்களுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை

★ 6, 8 வழி சாலை திட்டம் வேண்டாம் ★ சென்னையில் சர்வதேச விமான நிலையம்

ஹைட்ரோ கார்பன் திட்டத்தை கைவிடுங்கள்

மக்களவை, சட்டசபைகளில் பெண்களுக்கு 33% ஒதுக்கீடு

நீட், நுழைவுத் தேர்வுகளை கைவிடுங்கள்: பிரதமரிடம் ஸ்டாலின் நேரில் வலியுறுத்தல்

முதலமைச்சர் ஸ்டாலின் புதுடெல்லியிலுள்ள பிரதமர் இல்லத்தில், பிரதமர் நரேந்திரமோடியை சந்தித்து, அவருக்கு பொன்னாடை அணிவித்தார்.

சென்னை, ஜூன்.18–

நீட் மற்றும் நுழைவுத் தேர்வுகளை கைவிட வேண்டும் என்று பிரதமரிடம் முதலமைச்சர் ஸ்டாலின் நேரில் வலியுறுத்தினார்.

தமிழகத்தில் உள்ள மத்திய அரசு அலுவலகங்களில் வேலை வாய்ப்பில் தமிழர்களுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும் என்றும் மு.க.ஸ்டாலின் நேரில் வலியுறுத்தி மனு அளித்தார்.

டெல்லியில் நேற்று மாலை பிரதமர் நரேந்திர மோடியை அவரது இல்லத்தில் மு.க.ஸ்டாலின் சந்தித்து பேசினார்.

அப்போது பிரதமர் நரேந்திரமோடியும், தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலினும் ஒருவருக்கொருவர் பரஸ்பர வணக்கம் தெரிவித்துக் கொண்டனர். அதன்பின்னர் நரேந்திர மோடிக்கு, மு.க.ஸ்டாலின் பொன்னாடை அணிவித்தார். பதிலுக்கு நரேந்திர மோடியும் அவருக்கு பொன்னாடை அணிவித்து, தேர்தலில் வெற்றிபெற்று தமிழக முதலமைச்சராக பொறுப்பேற்றதற்கு வாழ்த்துகளை தெரிவித்தார். மு.க.ஸ்டாலினும் அப்போது அவருக்கு நன்றி தெரிவித்தார். அதனைத்தொடர்ந்து இருவரும் சில நிமிடங்கள் பேசிக்கொண்டனர்.

அதன்பின்னர் தமிழகத்தின் வளர்ச்சி திட்டங்கள் உள்பட பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய மனுக்களை பிரதமர் நரேந்திர மோடியிடம், மு.க.ஸ்டாலின் வழங்கி பேசினார். நரேந்திர மோடி–மு.க.ஸ்டாலின் இடையேயான சந்திப்பு ஏறத்தாழ 30 நிமிடங்கள் நடைபெற்றது.

பிரதமரிடம் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வழங்கி கோரிக்கை மனு விவரம் வருமாறு:

★ கர்நாடகாவில் மேகதாது அணை கட்டும் திட்டத்திற்கு அனுமதி வழங்கக் கூடாது.

★ முல்லைப்பெரியாறு அணையின் நீர் மட்ட உயர்வை 152 அடியாக உயர்த்த வேண்டும்.

கோதாவரி – காவிரி இணைப்பு

★ தீபகற்ப நதிகளான கோதாவரி – காவிரி, காவிரி – குண்டாறு நதிகளை இணைக்க வேண்டும்

★ பாக் நீரிணை பகுதியில் இந்திய மீனவர்கள் சென்று மீன்பிடிப்பதற்கான பாரம்பரிய உரிமையை உறுதி செய்வதோடு, அவர்களின் பாதுகாப்பிற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

★ கச்சத்தீவை மீட்பதோடு, அங்கு தமிழக மீனவர்கள் சென்று மீன்பிடிக்கும் உரிமையை மீட்டெடுக்க வேண்டும்.

★ மீனவர்களின் நலனுக்காக தேசிய ஆணையத்தை உருவாக்க வேண்டும்.

★ இலங்கை தமிழர்களுக்கு சமமான அரசியல் மற்றும் வாழ்வுரிமைகள் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

★ தமிழகத்திற்கு நிலக்கரி இறக்குமதி செய்வதிலும், ஒதுக்கீடு செய்வதிலும் இருக்கும் குளறுபடிகளை நீக்க வேண்டும்.

★ நலிவடைந்த மின்சார வாரியங்களுக்கு வழங்கும் நிதியை மத்திய அரசு முறைப்படுத்த வேண்டும்.

★ மின்சார திருத்த சட்ட மசோதா 2020ஐ திரும்பப் பெற வேண்டும்.

★ வரி மற்றும் கூடுதல் கட்டணங்களை மாநில அரசுகளுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும்.

★ மாநில நிதி நிலையில் 15வது நிதிக்குழுவின் பரிந்துரைகள் ஏற்படுத்திய தாக்கங்களை கவனிக்க வேண்டும்.

பாக்கித் தொகையை வழங்குங்கள்

★ 14வது நிதிக்குழுவி'டம் பரிந்துரைகளின்படி மாநில அரசுக்கு தர வேண்டிய நிதியின் பாக்கியை உடனே தர வேண்டும்.

★ தமிழக அரசுக்கு தர வேண்டிய ஜி.எஸ்.டி. உள்ளிட்ட பாக்கித் தொகைகளை வழங்க வேண்டும்.

★ 1996–97 மற்றும் 2014–15 ஆகிய ஆண்டுகளில் மாநில அரசுக்கு வழங்க வேண்டிய மத்திய வரி பங்குகளை அளிக்க வேண்டும்.

★ தமிழகத்தில் மேற்கொள்ளப்படவுள்ள மத்திய நிதியுதவி திட்டங்களுக்கு உடனடியாக அனுமதி அளிக்க வேண்டும்.

★ தமிழ்நாடு உள்கட்டமைப்பு நிதியில், தேசிய உள்கட்டமைப்பு முதலீட்டு நிதி (என்.ஐ.ஐ.எப்.) முதலீடு செய்ய வேண்டும்.

★ மாநில பேரிடர் நிவாரண நிதியை கூடுதலாக ஒதுக்க வேண்டும்.

நுழைவுத் தேர்வு கூடாது

★ நீட் என்ற மருத்துவ கல்விக்கான தகுதித் தேர்வையும், மற்ற கல்வி சேர்க்கைக்கும் வைக்கப்பட உள்ள நுழைவுத் தேர்வுகளையும் கைவிட வேண்டும்.

★ கோவையில் புதிய எய்ம்ஸ் மருத்துவமனை தோற்றுவிக்க வேண்டும்.

★ தமிழகத்திற்கு தேவையான கொரோனா தடுப்பு மருந்தை ஒதுக்கீடு செய்ய வேண்டும்.

★ லிப்போசோமால் ஆம்போடெரிசின் பி போன்ற உயிர் காக்கும் மருந்துகளை தேவையான அளவில் வினியோகம் செய்ய வேண்டும்.

★ மருத்துவ இளநிலை மற்றும் முதுநிலை கல்வி மாணவர் சேர்க்கையில் அகில இந்திய ஒதுக்கீட்டில் இதர பிற்படுத்தப்பட்டோர் பிரிவை அனுமதிக்க வேண்டும்.

★ வேளாண்மை தொடர்பான 3 சட்டங்களையும் திரும்பப் பெற வேண்டும்.

★ நெல் அரவை மானியத்தொகையை தமிழகத்திற்கு உடனே வழங்க வேண்டும்.

★ செங்கல்பட்டு எச்.எல்.எல். பயோடெக் மையம், குன்னூர் பாய்ச்சர் மையம் ஆகிய இடங்களில் கொரோனா தடுப்பூசி மருந்து உற்பத்தியை உடனடியாக தொடங்க வேண்டும்.

★ மெகா டெக்ஸ்டைல்ஸ் பூங்காவை தொடங்க அனுமதி அளிக்க வேண்டும்.

தேசிய கல்வி கொள்கை வாபஸ்

★ சேலம் இரும்பாலையில் கூடுதலாக உள்ள நிலப்பரப்பை பாதுகாப்பு தொழில் பூங்காவிற்கு அளிக்க வேண்டும்.

★ குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு சிறப்பு நிவாரண நிதி உதவி அளிக்க வேண்டும்.

★ தேசிய கல்விக்கொள்கையை திரும்பப் பெற வேண்டும்.

★ சர்வ சிக்ஷா அபியான் திட்டத்திற்கான மானியங்களை உடனே வழங்க வேண்டும்.

★ குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாய கல்வி சட்டத்தை அமல்படுத்த வேண்டும்.

சென்னை மெட்ரோ ரெயில்

★ சென்னை மெட்ரோ ரெயில் திட்டத்தின் 2வது கட்டத்திற்கான அங்கீகாரத்தை, மாநில மற்றும் மத்திய அரசின் 50 சதவீத நிதிப் பங்களிப்புடன் அளிக்க வேண்டும்.

★ சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் கேட்கும் ரெயில்வே நிலங்களை குத்தகைக்கு எடுத்துக்கொள்ள அனுமதிக்க வேண்டும்.

★ தமிழை இந்தியாவின் ஆட்சி மொழிகளில் ஒன்றாக அறிவிக்க வேண்டும். ஐகோர்ட்டில் தமிழை வழக்காடு மொழியாக அங்கீகரிக்க வேண்டும்.

வேலைவாய்ப்பில் முன்னுரிமை

★ தமிழகத்தில் உள்ள மத்திய அரசு அலுவலகங்கள் மற்றும் மத்திய பொதுத்துறை நிறுவனங்களில் தமிழக மக்களுக்கு வேலை வாய்ப்பில் முன்னுரிமை வழங்க வேண்டும்.

★ சென்னையில் உள்ள தமிழ் செம்மொழி ஆய்வு நிறுவனத்தை புதுப்பிக்க வேண்டும்.

★ திருக்குறளை தேசிய நூலாக அறிவிக்க வேண்டும்.

★ பிற்படுத்தப்பட்டோர் வகுப்பினரை அடையாளம் காண்பதற்காக உள்ள வருமான உச்சவரம்பை திரும்பப் பெற வேண்டும்.

★ மிகவும் பிற்படுத்தப்பட்டோர், எஸ்.சி., எஸ்.டி. பிரிவினருக்கு மாநில அரசுகளே மாநில தொகுப்பில் ஒதுக்கீடுகளை வழங்கும் வகையில் அரசியல் சாசனத்தில் திருத்தம் கொண்டு வரப்பட வேண்டும்.

உயர்மட்ட சாலைகள்

★ மதுரவாயல் – சென்னை துறைமுகம் இடையேயான உயர்மட்ட சாலை திட்டத்தை விரைவாக நிறைவேற்ற வேண்டும்.

★ சென்னை விமான நிலையம் – செங்கல்பட்டு உயர் மட்ட சாலைத் திட்டத்தை உடனடியாக செயல்படுத்த வேண்டும்.

★ சென்னை துறைமுகம் மற்றும் திருவொற்றியூரை இணைக்கும் கடல் பாலம் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும்.

8 வழி சாலை திட்டம் கைவிடுங்கள்

★ சென்னை, கன்னியாகுமரி இடையேயான 6 மற்றும் 8 வழிச்சாலை திட்டத்தை கைவிட வேண்டும்.

★ சென்னை – சேலம் இடையேயான பசுமை வழிச் சாலைத் திட்டத்தையும் கைவிட வேண்டும்.

★ தமிழகத்தின் துரிதமான பொருளாதார வளர்ச்சிக்காக தூத்துக்குடி துறைமுகத்தை விரிவாக்கம் செய்ய வேண்டும்.

★ சேதுசமுத்திரம் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும்.

★ சென்னையில் சுப்ரீம் கோர்ட்டின் கிளையை உருவாக்க வேண்டும்.

★ சென்னையில் உலகத் தரம் வாய்ந்த புதிய சர்வதேச விமான நிலையத்தை அமைக்க வேண்டும்.

★ மதுரை விமான நிலையத்தை சர்வதேச விமான நிலையமாக அறிவிக்க வேண்டும்.

★ சேலம் மற்றும் தூத்துக்குடியில் உள்ள விமான நிலையங்களை விரிவாக்கம் செய்வதோடு அவற்றை நவீனப்படுத்த வேண்டும்.

★ மக்களவை மற்றும் மாநில சட்டசபைகளில் பெண்களுக்கு 33 சதவீத இடஒதுக்கீட்டை வழங்குவதற்கு வழிவகை செய்யும் மசோதாவை நிறைவேற்ற வேண்டும்.

★ ஊரகப் பகுதியில் மகாத்மா காந்தி வேலை வாய்ப்பு உத்தரவாதத் திட்டத்தில் பணியாற்றுவோர் 150 நாட்கள் பணியாற்ற வழிவகை செய்யும் வகையில் சட்ட திருத்தம் கொண்டு வர வேண்டும்.

★ நகர்ப்புற வேலை வாய்ப்பு ஊதிய திட்டத்தை தொடங்க வேண்டும்.

★ தமிழகத்திற்கான புதிய ரெயில்வே திட்டங்களை அமல்படுத்த வேண்டும்.

★ குடியுரிமை திருத்த சட்டத்தை திரும்பப் பெற வேண்டும்.

★ சென்னையில் அறிவுசார் சொத்துரிமை மேல்முறையீட்டு தீர்ப்பாயம் தொடர்ந்து நடத்தப்பட வேண்டும்.

★ ஹைட்ரோகார்பன் மற்றும் நியூட்ரினோ தொடர்பான திட்டங்களை கைவிட வேண்டும்.

★ சுற்றுப்புறச் சூழல் தாக்க மதிப்பீட்டு அறிவிப்பாணை – 2020ஐ திரும்பப் பெற வேண்டும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

பொதுமக்களுக்கு தனியார் செட்டாப் பாக்சை வழங்கி அரசுக்கு வருவாய் இழப்பை ஏற்படுத்தும் கேபிள்டிவி ஆபரேட்டர்கள் மீது நடவடிக்கை

அமைச்சர் மனோ தங்கராஜ் எச்சரிக்கை

சென்னை, ஜூன் 18–

அரசு கேபிள் டிவி நிறுவன செட்டாப் பாக்ஸ்களை பொதுமக்களுக்கு வழங்காமல், தனியார் செட்டாப் பாக்ஸ்களை வழங்கி அரசுக்கு வருவாய் இழப்பை ஏற்படுத்தும் கேபிள் டிவி ஆபரேட்டர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சர் மனோ தங்கராஜ் தெரிவித்துள்ளார்.

தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் மனோ தங்கராஜ் வெளியிட்டுள்ள அறிவிப்பில் கூறியிருப்பதாவது:–

குறைந்த கட்டணத்தில் அதிக சேவைகள்

தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் கட்டணமின்றி, இலவசமாக செட்டாப் பாக்ஸ்களை வழங்கி 200–க்கும் மேற்பட்ட சேனல்களை பொதுமக்களுக்கு ரூ.140+ஜி.எஸ்.டி. என்ற குறைந்த மாத சந்தா தொகையில் வழங்கி வருகிறது. இது மற்ற நிறுவனங்களை விட மிக குறைந்த கட்டணம் ஆகும். குறைந்த கட்டணத்தில் அதிகமான சேனல்களை வழங்கி வருகின்றது.

தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் சேவையை விரும்பும் பொதுமக்கள் அந்த பகுதியில் உள்ள அரசு கேபிள் டிவி சேவையை வழங்கும் ஆபரேட்டரிடம் கேட்டு பெறலாம். அவ்வாறு பொதுமக்களுக்கு அரசின் சேவையை கேபிள் ஆபரேட்டர் வழங்கவில்லை என்றால் கட்டணமில்லா தொலைபேசி எண் 18004252911 மூலம் பொதுமக்கள் புகார் செய்யலாம்.

தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் செட்டாப் பாக்ஸ்கள் பழுது அடைந்தாலோ, மாதாந்திர கட்டணம் செலுத்தாமல் துண்டிப்பு செய்யப்பட்டிருந்தாலோ, அல்லது சந்தாதாரர் குடிபெயர்ந்து வேறு இடத்திற்கு சென்றாலோ, அல்லது தனியார் செட்டாப் பாக்ஸ்களை பயன்படுத்தினாலோ, இந்நிறுவனத்தின் செட்டாப் பாக்ஸ் மற்றும் ரிமோட் அடாப்டர் ஆகியவற்றை அந்த பகுதியில் உள்ள அரசு செட்டாப் பாக்ஸை வழங்கிய அரசு கேபிள் டிவி ஆபரேட்டர்களிடம் திரும்ப ஒப்படைக்க வேண்டும். உள்ளூர் கேபிள் ஆபரேட்டர்களுக்கு ஒப்பந்தத்தின் அடிப்படையிலேயே செட்டாப் பாக்ஸ்கள் வழங்க பட்டுள்ளதால் அதனை அவர்கள் அரசு கேபிள் டிவி அலுவலகத்தில் திரும்ப ஒப்படைக்க வேண்டும்.

நடவடிக்கை

ஒருசிலகேபிள்டிவிஆபரேட்டர்கள், தமிழ்நாடு அரசு கேபிள் டிவி சேவையை வழங்குவதற்காக இந்நிறுவனத்திடமிருந்து செட்டாப் பாக்ஸ்களை பெற்று கொண்டு, அதை பொதுமக்களுக்கு வழங்காமல், தங்கள் சுய லாபத்திற்காக, தனியார் நிறுவன செட்டாப் பாக்ஸ்களை பொதுமக்களுக்கு வழங்கி அரசு நிர்ணயம் செய்த தொகையை விட கூடுதலாக வசூல் செய்வதாக, புகார்கள் வந்த வண்ணம் உள்ளது.

தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்திற்கு இவ்வாறு வருவாய் இழப்பீடு ஏற்படுத்தும் கேபிள் டிவி ஆபரேட்டர்கள் மீதும், தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் செட்டாப் பாக்ஸ்களை மூன்று மாதங்களுக்கு மேலாக செயலாக்கம் செய்யாமலும், அவ்வாறு செயலாக்கம் செய்யாத செட்டாப் பாக்ஸ்களை திரும்ப ஒப்படைக்காத கேபிள் டிவி ஆபரேட்டர்கள் மீதும் நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் மனோ தங்கராஜ் கூறியுள்ளார்.

பிரபல அமெரிக்க பல்கலைக்கழக தலைவராக தமிழர்

நியூயார்க், ஜூன் 18–

அமெரிக்காவின் இலினொய் தொழில்நுட்ப பல்கலைக்கழக தலைவராக தமிழரான ராஜகோபால் ஈச்சம்பாடி நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

அமெரிக்கா நாட்டில் உள்ள 131 ஆண்டு பழமையானதும், உலகப் புகழ்பெற்ற தொழில்நுட்ப பல்கலைக்கழகமுமான இலினொய் பல்கலைக் கழகத்தின் தலைவராக, ராஜகோபால் ஈச்சம்பாடி தேர்வாகி உள்ளார்.

இலினொய் பல்கலைக் கழகத்தின் தலைவராக பொறுப்பேற்கும் முதல் இந்தியர் என்ற பெருமையை ராஜகோபால் பெற்றிருக்கிறார்.

53 வயதாகும் ராஜகோபால் ஈச்சம்பாடி சென்னையில் பிறந்து, அங்கேயே பள்ளி மற்றும் கல்லூரிப் படிப்பை முடித்தவர். அவர், அண்ணா பல்கலைக்கழகத்தின் வளாகக் கல்லூரியான கிண்டி கல்லூரியில் தனது பொறியியல் படித்தார். பின்னர் எம்.பி.ஏ. முதுகலைப்பட்ட படிப்பை அண்ணா பல்கலைக்கழகத்தில் படித்து முடித்தார்.

இலினொய் பல்கலைக்கழக 10 ஆவது தலைவராக வரும் ஆகஸ்ட் 16 இல் பொறுப்பேற்கிறார் ராஜகோபால் ஈச்சம்பாடி. தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சியில் அண்ணா பல்கலைக்கழகம் மற்றும் சென்னை ஐ.ஐ.டி.யுடன் இணைந்து செயல்பட விரும்புவதாக ராஜகோபால் ஈச்சம்பாடி தெரிவித்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

IDBI BANK
CIN: L65190MH2004GOI148838
ஐடிபிஐ வங்கி லிமிடெட், என்பிஏ மானேஜ்மெண்ட் குரூப்
ஐடிபிஐ டவர், 7வது தளம், டபிள்யூடிசி வளாகம், கபே பரேட், மும்பை – 400 005

வேண்டுமென்றே பணம் கட்டத் தவறியவர்கள் குழுவின் முடிவை அறிவித்தல்

கடன் பெற்ற நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி : பிஎஸ்எல் லிமிடெட், பதிவு அலுவலகம்: கச்சிகம், டாமன் யூனியன் பிரதேசம், டாமன் அன்ட் டையூ - 396 210
இந்திய ரிசர்வ் வங்கியின் முதன்மை சுற்றறிக்கையின்படி, ஐடிபிஐ வங்கியால் மே 11, 2021 தேதியிட்டே வேண்டுமென்றே பணம் கட்டத் தவறியவர்கள் குழுவின் முடிவு அறிவிப்பு தொடர்பான கடிதம் தங்களால் பெறப்படாமல்/வழங்கப்படாமல்/திரும்ப வந்துவிட்டது. இதன் காரணமாக வேண்டுமென்றே பணம் கட்டத் தவறியவர்களை அடையாளம் காண்பதற்கான நடவடிக்கைகள் தொடங்கப்பட்டுள்ளன என்று கீழ்க்கண்ட கார்ப்பரேட் உத்தரவாததாரருக்கு இந்த அறிவிப்பு மூலம் தெரிவிக்கப்படுகிறது.

பெயர் மற்றும் முகவரி	பதவி
1. மெசர்ஸ் புரோக்கன் ஹில்ஸ் இன்டர்நேஷனல் பிரைவேட் லிமிடெட், 8/2, மாண்டியத் சந்து, எழும்பூர், சென்னை - 600 008	பிஎஸ்எல் லிமிடெட்டின் கார்ப்பரேட் உத்தரவாததாரர்

வகை எண்.	பணம் கட்டத் தவறியவர்களின் வகை
2.1.3(b)	**நிதியை திசை திருப்புதல்:** கடன் வழங்கியவருக்கு அதன் கொடுப்பனவு/திருப்பிச் செலுத்தும் கடமைகளை நிறைவேற்றுவதில் யூனிட் தவறிவிட்டது, மேலும் கடன் வழங்குநரிடமிருந்து பெறப்பட்ட நிதி குறிப்பிட்ட நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படவில்லை, அந்த நிதி பிற நோக்கங்களுக்காக மாற்றப்பட்டுள்ளது.
2.2.1(c)	எந்தவொரு முறைகள் மூலமாகவும் துணை நிறுவனங்கள் / குழும நிறுவனங்கள் அல்லது பிற நிறுவனங்களுக்கு நிதியை மாற்றுதல்.
2.1.3(c)	**நிதியை முடக்குதல்:** கடன் வழங்கியவருக்கு அதன் கொடுப்பனவு / திருப்பிச் செலுத்துதல் கடமைகளை நிறைவேற்றுவதில் யூனிட் தவறிவிட்டது. பெறப்பட்ட நிதி குறிப்பிட்ட நோக்கத்திற்காக பயன்படுத்தப்படாமல் நிதிகள் முடக்கப்பட்டதோடு மட்டுமல்லாமல் அந்த தொகையை பிற சொத்துகளுக்காக பயன்படுத்தி உள்ளது
2.2.2	வங்கிகள் / நிதி நிறுவனங்களில் இருந்து வாங்கப்படும் எந்தவொரு நிதியும் கடன் வாங்குபவரின் செயல்பாடுகளுடன் தொடர்புடைய நோக்கங்களுக்காக, நிறுவனத்தின் அல்லது கடன் வழங்குநரின் நிதி ஆரோக்கியத்திற்கு தீங்கு விளைவிக்கும் வகையில் பயன்படுத்தப்பட்டால், மேலே குறிப்பிட்டபடி நிதியை முடக்க கட்டாயப்படுத்தப்பட வேண்டும்.

மேற்கூறிய கார்ப்பரேட் உத்தரவாததாரர் விரும்பினால், ஏன் அவர்கள் பணம் கட்டத் தவறியவர்கள் என்று அறிவிக்கவோ மற்றும் ஆர்பிஐ-க்கு புகார் தெரிவிக்கவோ கூடாது என்பதற்கான பிரதிநிதித்துவத்தை எழுத்துப்பூர்வமாக இந்த அறிவிப்பு வெளியான தேதியிலிருந்து 15 நாட்களுக்குள் சமர்ப்பிக்கலாம்.
இடம் : மும்பை ஒப்பம்/-
தேதி : 18.06.2021 அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி

சுவாதீனம் எடுத்த அறிவிப்பு – (அசையா சொத்து) விதி 8–(1)

கீழே கையெழுத்திட்டுள்ள ஐஐஎப்எல் ஹோம் பைனான்ஸ் லிமிடெட்டின் (முன்னர் இந்திய இன்பேஸலன் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்) (ஐஐஎச்எப்எல்) அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்கள், 2002ம் ஆண்டு கடனீட்டுச் செத்துக்களை ரெக்கக்டிகளுக்குமற்றும் நிதி சொத்துகளை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் செத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டத்தின் கீழும், மேற்சென்ன சட்டத்தின் 13(12)வது பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரத்தின் கீழும், 2002ம் ஆண்டு கடனீட்டுச் செத்துக்கள் மீதான உரிமை (அமலாக்க) விதிகள், 3வது விதிமுறையின் கீழும் கடன்தாரர்கள்/ உடன்கடன்தாரர்கள் ஆகியோருக்கு அனுப்பிய டிமாண்டு நோட்டீசில் குறிப்பிடப்பட்டுள்ளபடி செலுத்த வேண்டிய தொகையை மேற்சென்ன நோட்டீஸ் கிடைத்த 60 நாட்களுக்குள் திரும்ப செலுத்துமாறு கேட்டுக் கொண்டிருந்தார். கடன்தாரர் மேற்சென்ன தொகையை திரும்ப செலுத்த தவறிவிடுதல் கடன்தாரர் மற்றும் பொதுமக்களுக்கு, பொதுவகையாக அறிவிக்கப்படுகிறது பகிரளி கீழே கையெழுத்திட்டுள்ள அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியானவர், கீழ்குறிப்பிட்டுள்ள சொத்தை மேற்சென்ன சட்டத்தின் 13(4) பிரிவின் கீழ் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படியும், மேற்சென்ன 9வது விதிமுறைக்கு இணங்கவும் சுவாதீனம் எடுத்துக் கொண்டார். கடன்தாரருக்கு குறிப்பாகவும், பொதுமக்களுக்கு, பொதுவகையாக எச்சரிக்கப்படுவது பகிரளி, சுவாதீனம் எடுத்துக் கொண்ட இந்த சொத்து "ஐஐஎச்எப்எல்" -க்கு திரும்ப செலுத்த வேண்டிய தொகை மற்றும் வட்டிக்கும் பிணையமாக உள்ளது என்பதனால், யாரும் மேற்படி சொத்து தொடர்பாக எந்தவித விலைவர்த்தகமும் மற்றும் தொடர்புவைத்தும் கொள்ளக் கூடாது என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது. கட்டப்பிரிவு 13, துணைப்பிரிவு (8)ன்படி கடன்தாரரின் கவனத்திற்கு கொண்டு வரப்படுவது யாதெனில், "ஐஐஎச்எப்எல்"-க்கு செலுத்த வேண்டிய பாக்கித்தொகை, அனைத்து செலவுகள், கட்டணங்கள் மற்றும் ஏற்பட்ட செலவுகள் ஆகியவற்றை கடன்தாரர் விற்பனை அல்லது மற்ற நிர்ணயிக்கப்பட்ட தேதிக்கு முன்னதாக எப்போது கட்டினாலும் ஈடு பெற்ற ஆஸ்திகள் "ஐஐஎச்எப்எல்"-ஆல் விற்பனை செய்யப்படாது அல்லது மற்றப்பட்டாது மற்றும் ஈடுபெற்ற ஆஸ்திகளை விற்க அல்லது மற்றும் நடவடிக்கைகளை "ஐஐஎச்எப்எல்" மேற்கொள்ளாது.

கடன்தாரர்(கள்) பெயர் சென்னை கிளை	ஈடுபெற்ற ஆஸ்திகள் விவரம் (அசையா சொத்து)	செலுத்த வேண்டிய பாக்கித்தொகை(ரூ.)	டிமாண்ட் நோட்டீஸ் தேதி	சுவாதீன தேதி
திரு. கிருஷ்ணமூர்த்தி S, எப்.ஏ. பேப்கேடேடர், திருமதி. கீதா K (புரஸ்பெக்ட் எண்.903645, 724430 மற்றும் 723010)	தமிழ்நாடு – 600 091, சென்னை, மடிப்பாக்கம் பல் ஸ்டாப் அருகில், வாத்தியேயுரம், சரிக்கரை முதல் தெரு, திலக் காலனி, ஏ – பிளாக், கீழ்தளம், பிளாட் எண்.ஜி–1, விஸ்தீரணம் 760 சதுர அடி மற்றும் சீரு துண்டுகளும் அதன் பகுதிகளும்.	புரஸ்பெக்ட் எண். 903645 - ரூ.7,96,809/- புரஸ்பெக்ட் எண். 724430 - ரூ.6,63,538/- புரஸ்பெக்ட் எண். 723010 – ரூ.21,87,419/-	02 மார்ச் 2021	15 ஜூன் 2021

மேற்கொண்டு விவரங்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, கிளை அலுவலகம் பரல்கனர் பிபூச்சாரா டவர்ஸ், 10/01, வெங்கட்நாராயணா சாலை, தி. நகர், சென்னை – 600 117 மற்றும்/அல்லது கார்ப்பரேட் அலுவலகம்: மனை எண். 98, பேஸ்–IV, உத்யோக் விஹார், குர்கன், ஹரியானா அவர்களை அணுகலாம்
இடம் : சென்னை ஒப்பம்/–அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி,
தேதி : 18.06.2021 ஐஐஎப்எல் ஹோம் பைனான்ஸ் லிமிடெட்டிற்காக (ஐஐஎப்எல் எச்எப்எல்)

ரவி குமார் டிஸ்டிரில்லரிஸ் லிமிடெட்
CIN: L51909PY1993PLC008493
பதிவு அலுவலகம்: C-9, C-10, இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், 2வது பிரதான சாலை தட்டாஞ்சாவடி, புதுச்சேரி - 605 009.

அறிவிப்பு

SEBI (பொறுப்புகளை பட்டியலிடுதல் மற்றும் தேவைகளை வெளிப்படுத்துதல்) விதிகள் 2015 ன் விதி 29 மற்றும் 47ன்படி

31-03-2021 அன்றுடன் முடிந்த காலாண்டு மற்றும் ஆண்டுக்கான கம்பெனியின் தணிக்கை செய்யப்பட்ட நிதிநிலை முடிவுகளை பரிசீலித்து ஒப்புதல் பெற்று பதிவுக்கு எடுத்துக்கொள்வதற்காக கம்பெனியின் இயக்குனர்கள் குழு கூட்டம் **25-06-2021 வெள்ளி கிழமையன்று** நடைபெற உள்ளது என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

30-03-2021 தேதியிட்ட எங்களது கடிதத்திற்கு இணங்க 2015 SEBI ன் திருத்தப்பட்ட மற்றும் தெடர்ச்சியாக விதிமுறைகளின்படி (உள்வர்த்தக தடை) 31-03-2021 அன்றுடன் முடிந்த காலாண்டு மற்றும் ஆண்டுக்கானக்கான தணிக்கை செய்யப்பட்ட நிதிநிலை முடிவுகள் அறிவிப்புக்கு பிறகு 01-04-2021 முதல் 48 மணி நேரம் வரை நிறுவனத்தில் (நியமிக்கப்பட்ட நபர்களுக்கான) வர்த்தக சாளரம் மூடப்பட்டிருக்கும்.

மேலும் அறிவிப்பில் குறிப்பிடப்பட்ட தகவல்களை கம்பெனியின் இணையதளம்: **www.ravikumardistilleries.com** என்ற இணையதளத்திலும், NSE மற்றும் BSE இணையதளங்களின் கார்ப்பரேட் அறிவிப்பு பிரிவில் இந்த அறிவிப்பை காணலாம்.

ரவி குமார் டிஸ்டிரில்லரிஸ் லிமிடெட்டுக்காக
ஒப்பம்/- R.V. **ரவிகுமார்**
இடம் : புதுச்சேரி நிர்வாக இயக்குனர்
தேதி : 17-06-2021 DIN: 00336646

பொது அறிவிப்பு

ரைட்டர் பிசினஸ் சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட் அதன் பிரிவு ரைட்டர் இன்பர்மேஷன் மானேஜ்மெண்ட் சர்வீசஸ் மூலம் பதிவு மேலாண்மை சேவைகளை வழங்குவதில் ஈடுபட்டுள்ளது, பல நிறுவனங்களின் பதிவுகள்/ஆவணங்களை வைத்திருக்கிறது என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது. அவற்றில், கீழ்க்குறிப்பிட்டுள்ள பார்ட்டி (அல்லது பார்ட்டிகள்) அவர்களின் பதிவுகள்/ ஆவணங்களின் உடைமை மற்றும் உரிமை கோர நிறுவனத்தை அணுக தவறிவிட்டனர் மற்றும் அறிவிப்புகள்/ஏராளமான கடிதப் பரிமாற்றங்கள் உட்பட நிறுவனத்தால் மிகப்பெரிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டாலும், இன்று வரை அந்த பார்ட்டியினால் (அல்லது பார்ட்டிகளால்) எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

வரிசை எண்.	வாடிக்கையாளர் பெயர்
1	G E T வாட்டர் சொல்யூஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்

இதன் மூலம் பொதுமக்களுக்கு அறிவிக்கப்படுவது யாதெனில், மேற்கூறிய பார்ட்டியின் (அல்லது பார்ட்டிகள்) பதிவுகள்/ஆவணங்கள் தொடர்பாக எந்தவொரு நபருக்கும் எந்தவொரு உரிமை, நலன், உரிமை கோரல் இருப்பின் அது குறித்து எழுத்து மூலமாக ஆவண ஆதாரங்களுடன் கீழ்க்கையொப்பமிட்டவர், ரைட்டர் பிசினஸ் சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட், மனை எண். 105, டாக்டர் பாபாசாகேப் அம்பேத்கர் சாலை, லால்பாக், மும்பை 400 033 மற்றும்/ அல்லது வர்த்தக முதன்மை இடம்,